[2023 ஏப்ரல் 13

ஆகாயத் தாமரை

***12682—திருமதி கு. சித்ரா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஏரியில் உள்ள ஆகாயத் தாமரைகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இக்கேள்வி 2021 ஆம் ஆண்டில் கேட்கப்பட்ட கேள்வி ஆகும். சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியில் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தால் படகுக் குழாம் நடத்தப்படுகிறது. அங்கு இருந்த ஆகாயத்தாமரைகள் அனைத்தையும் அகற்றுவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக, 15.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அவை முழுவதுமாக சுத்தம் செய்யப்பட்டு, தற்போது அந்த இடத்தில் ஆகாயத் தாமரைகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.*

முற்பகல் 10–20

திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மேலும், மக்களின் தலைவர், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். ஏற்காடு ஏரியிலுள்ள ஆகாயத் தாமரைகளை அகற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே, ஏற்காடு ஏரியில் ஆகாயத் தாமரைகள் முழுவதுமாக அகற்றப்படாமல் பாதியளவு மட்டுமே அகற்றப்பட்டுள்ளன. தற்போது, மீதமுள்ள ஆகாயத் தாமரைகளை அகற்றி, ஏற்காடு ஏரியைத் தூர்வாரி, சுத்தப்படுத்தித்தர வேண்டும்*

2023 ஏப்ரல் 13]

என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், விடுமுறை நாட்களில் ஏற்காட்டில் கூட்ட நெரிசல் அதிகமாக உள்ளதால், ஒரு தொங்குபாலம் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகாயத் தாமரைகளை அகற்றி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அவை வளர வளர, மீண்டும் மீண்டும் சுத்தம் செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றன. தற்போது, அவை வளர்ந்திருந்தால், அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, உடனடியாகச் சரிசெய்து கொடுத்துவிடுகிறோம். மக்களின் பிரச்சினைகளாக உள்ள மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்காக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒரு* DPR–*ஐ தயார் செய்து, அங்கு என்னென்ன தேவை, என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதை ஊர்ஜிதம் செய்து, அதற்கு எவ்வளவு செலவாகும் என்ற திட்ட மதிப்பீடு அனுப்பப்பட்டால், நிச்சயமாக சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நிதி நிலைமைக்கேற்ப செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.*

திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பல தடவை தொங்கு பாலம் அமைத்துத்தர கேட்டு* letter *கொடுத்திருக்கிறோம். மழைக்காலங்களில், ஏரியிலுள்ள நீரின்* colour *மாறிவிடுவதைக் குறிப்பிட்டு, கலெக்டரிடம் பல தடவை* letter *கொடுத்திருக்கிறோம். ஏரியைத் தூர்வாரினால் மட்டும்தான் அந்த நீர் நன்றாகயிருக்கும். சுற்றுலாப் பயணிகள் எவரும் அந்த ஏரியைப் பார்க்காமல் செல்ல மாட்டார்கள். ஏற்காட்டிற்கு சுற்றுலா வரும் மக்கள் அந்த ஏரியைப் பார்த்துவிட்டுத்தான் மற்ற இடங்களைப் பார்க்கச் செல்வார்கள். எனவே, அந்த ஏரியைத் தூர்வாரித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

[2023 ஏப்ரல் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக, எதிர்காலத்தில் பரிசீலனை செய்து அதைத் தூர் வாருவதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

156—

துணை மின் நிலையம்

***1637—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம், கருக்காக்குறிச்சியில் 110 KV *துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) 6–4–2023 அன்று உச்சபட்ச மின்நுகர்வாக 12,252 MW*–ஆக இருந்த நிலை, நேற்று 18,667* MW*–ஆக உயர்ந்துள்ளது. அதேபோல, ஒருநாள் பயன்பாடு என்பது, 11–4–2023 அன்று 397 மில்லியன் யூனிட்டாக இருந்தது என்று நேற்று அவையிலே சொல்லியிருந்தேன். நேற்று, 12–4–2023 அன்று, ஒருநாள் பயன்பாடு 399 மில்லியன் யூனிட்டைக் கடந்து உச்சபட்ச ஒருநாள் பயன்பாட்டிற்கு மின்சார வாரியம் தடையில்லாமல் மின்விநியோகம் செய்திருக்கிறது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட மின்பகிர்மான வட்டத்தில், கருக்காக்குறிச்சியில் புதிய 110 KV